## 6th Civics Test 3 - தேசிய சின்னங்கள்

I. சரியான விடையைத் தேர்வு செய்க.

1. தேசியப் பாடலான வந்தே மாதரத்தை இயற்றியவர் ___________.

அ) பிங்காலி வெங்கையா ஆ) ரவீந்திரநாத் தாகூர்

இ) பங்கிம் சந்திர சட்டர்ஜி ஈ) காந்திஜி

2. இந்தியாவின் தேசிய கீதம் ___________.

அ) ஜன கண மன ஆ) வந்தே மாதரம்

இ) அமர் சோனார் பாங்கலே ஈ) நீராடுங் கடலுடுத்த

3. ஆனந்தமடம் என்ற புகழ் பெற்ற நாவலை எழுதியவர் ___________.

அ) அக்பர் ஆ) ரவீந்திரநாத் தாகூர்

இ) பங்கிம் சந்திர சட்டர்ஜி ஈ) ஜவஹர்லால் நேரு

4. ______ பிறந்தநாளைச் சர்வதேச அகிம்சை நாளாகக் கொண்டாடப்படுகிறது.

அ) மகாத்மா காந்தி ஆ) சுபாஷ் சந்திர போஸ்

இ) வல்லபாய் பட்டேல் ஈ) நேரு

5. நம் தேசியக் கொடியில் உள்ள அசோகச் சக்கரத்தின் நிறம் ___________.

அ) வெளிர்நீலம் ஆ) கருநீலம் இ) நீலம் ஈ) பச்சை

6. இந்திய விடுதலை நாளில் பறக்கவிடப்பட்ட முதல் தேசியக்கொடி ______ அருங்காட்சியகத்தில் உள்ளது.

அ) சென்னை கோட்டை ஆ) டெல்லி இ) சாரநாத் ஈ) கொல்கத்தா

7. தேசியக் கீதத்தை இயற்றியவர் ___________.

அ) தேவேந்திரநாத் தாகூர் ஆ) பாரதியார்

இ) ரவீந்திரநாத் தாகூர் ஈ) திலகர்

8. தேசியக் கீதம் பாடுவதற்கு எடுத்துக் கொள்ள வேண்டிய கால அளவு __________

அ) 50 வினாடிகள் ஆ) 52 நிமிடங்கள் இ) 52 வினாடிகள் ஈ) 20 வினாடிகள்

9. 1896 தேசிய காங்கிரஸ் மாநாட்டின்போது வந்தே மாதரம் பாடலைப் பாடியவர் ______

அ) பங்கிம் சந்திர சட்டர்ஜி ஆ) ரவீந்திரநாத் தாகூர்

இ) காந்தி ஈ) சரோஜினி நாயுடு

10. விடுதலை நாளின்போது டெல்லியில் கொடியேற்றுபவர் ___________

அ) பிரதம அமைச்சர் ஆ) குடியரசுத் தலைவர்

இ) துணைக்குடியரசுத் தலைவர் ஈ) அரசியல் தலைவர் எவரேனும்

11. இந்திய தேசிய இலச்சினை ___________ல் உள்ள அசோகத் தூணிலிருந்து ஏற்றுக்கொள்ளப்பட்டது.

LIVEWORKSHEETS

அ) சென்னை கோட்டை ஆ) டெல்லி இ) சாரநாத் ஈ) கொல்கத்தா

12. இந்தியாவின் தேசியக் கனி ___________.

அ) மா ஆ) கொய்யா இ) வாழை ஈ) பழம்

13. இந்தியாவின் தேசியப் பறவை___________.ஆலம்

அ) அன்னம் ஆ) மரகத புறா இ) புறா ஈ) மயில்

14. இந்தியாவில் தேசிய மரம்___________.

அ) பனை ஆ) வாழை இ) ஆலம் ஈ) மா

15. 1947 விடுதலை நாளின் போது ஏற்றப்பட்டக் கொடி ______ என்னுமிடத்தில் நெசவு செய்யப்பட்டது.

அ) சென்னை ஆ) குடியாத்தம் இ) கும்மிடிப் பூண்டி ஈ) வெள்ளூர்

16. இந்திய தேசியக் கொடியை வடிவமைத்தவர் ___________.

அ) பிங்காலி வெங்கையா ஆ) ரவீந்திரநாத் தாகூர்

இ) பங்கிம் சந்திர சட்டர்ஜி ஈ) காந்திஜி

17. சக ஆண்டு முறையைத் துவக்கியவர் ___________.

அ) இயேசு ஆ) கனிஷ்கர் இ) அசோகர் ஈ) புத்தர்

18. இந்தியாவின் மிக நீளமான ஆறு ___________.

அ) பிரம்மபுத்திரா ஆ) யமுனா இ) சிந்து ஈ) கங்கை

19. இந்திய நாணயத்தின் குறியீட்டை வடிவமைத்தவர் ___________.

அ) ஷெர்ஷா சூரி ஆ) ரா . உதயகுமார் இ) டி. உதயகுமார் ஈ) அக்பர்

20. தேசியக் கொடியில் உள்ள அசோகச் சக்கரம் ___________ ஆரங்களைக் கொண்டது.

அ) 20 ஆ) 22 இ) 23 ஈ) 24

21. நான்முகச் சிங்கம் தற்போது ___________ அருங்காட்சியகத்தில் உள்ளது.

அ) சென்னை கோட்டை ஆ) டெல்லி இ) சாரநாத் ஈ) கொல்கத்தா

22. தேசியக் கீதம் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆண்டு ___________.

அ) 1949 ஆ) 1947 இ) 1948 ஈ) 1950

23. ___________ இந்தியாவின் தேசிய நுண்ணுயிரியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அ. லாக்டோ பேசில்லஸ் ஆ. ரைசோபியம் இ. பென்சிலின் ஈ. காக்கஸ்

24. பொருத்துக

1. காவி – அ. நேர்மை

2. வெள்ளை – ஆ. வீரம்

3 . குதிரை – இ. கடின உழைப்பு

4. காளை – ஈ. வேகம்

LIVEWORKSHEETS

அ) 1 - ஆ, 2 - அ, 3 - ஈ, 4 - இ ஆ) 1 - ஆ, 2 - அ, 3 - இ, 4 - ஈ

இ) 1 - அ, 2 - ஆ, 3 - ஈ, 4 - இ ஈ) 1 - ஆ, 2 - இ, 3 - அ, 4 - இ

25.. பொருத்துக

1. ரவீந்திரநாத் தாகூர் – அ. தேசியப் பாடல்

2. பங்கிம் சந்திர சட்டர்ஜி – ஆ. தேசியக்கொடி

3. பிங்காலி வெங்கையா – இ. வான் இயற்பியலாளர்

4. மேக்னாத் சாகா – ஈ. தேசியகீதம்

அ) 1 - ஆ, 2 - அ, 3 - ஈ, 4 - இ ஆ) 1 - அ , 2 - ஈ , 3 - ஆ , 4 -ஈ

இ) 1 - அ, 2 - ஆ, 3 - ஈ, 4 - இ ஈ) 1 - ஈ, 2 - அ , 3 - ஆ , 4 - இ

26. தவறான சொற்றொடரைத் தேர்ந்தெடுக்கவும்.

அ) தேசியக் கொடியின் நீள அகலம் 3:2 என்ற விகிதத்தில் உள்ளது.

ஆ) ராஜ நாகம் தேசிய ஊர்வன விலங்கு.

இ) அசோகச் சக்கரம் கரு நீல நிறமுடையது.

ஈ) பிதிமாரி வெங்கடசுப்பாராவ் தேசிய உறுதி மொழியை வங்க மொழியில் எழுதினார்.

27. தவறான சொற்றொடரைத் தேர்ந்தெடுக்கவும்

அ) பிங்காலி வெங்கையா தேசியக்கொடியை வடிவமைத்தார்.

ஆ) விடுதலை நாளில் ஏற்றப்பட்ட முதல் தேசியக் கொடி தற்போது கொல்கத்தா அருங்காட்சியகத்தில் உள்ளது.

இ) சக ஆண்டு மார்ச் 22 அன்று தொடங்கும்

ஈ ) நமது மாநில மலர் செங்காந்தள்.

28. சரியான சொற்றொடரைத் தேர்ந்தெடுக்கவும்.

அ) ஆகஸ்டு 15 அன்று விடுதலை நாள் கொண்டாடப்படுகிறது.

ஆ) நவம்பர் 26 அன்று குடியரசு நாள் கொண்டாடப்படுகிறது

இ) அக்டோபர் 12 அன்று காந்தி ஜெயந்தி கொண்டாடப்படுகிறது

ஈ ) ஜனவரி 30 , அன்று 'பாசறைக்கு திரும்புதல்' என்ற விழா சிறப்பாக நடைபெறும்

LIVEWORKSHEETS